1971 ஜூலை 29]

* *482* வினா—திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா, அருப்புக்கோட்டை தாலுக்கா, வாகைக்குளம் கண்மாய்க்கு நாராயணக் காவேரியில் இருந்து வரும் வரத்துக்கால்வாயை (Supply channel) உடனடியாக வெட்டிச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

கடைநிலை ஊழியர்களுக்குக் குடியிருப்பு

* *483* வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் (Government Estate) கடைநிலை ஊழியர்களுக்கு மேலும் வீடு கட்டித்தர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை, ஐயா.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, கடைநிலை ஊழியர்களுக்கு அரசாங்க எஸ்டேட்டில் போதிய அளவில் வீடுகள் கட்டவில்லை என்றாலும் வீட்டுவசதி வாரியம் கட்டும் வீடுகள் கணிசமான எண்ணிக்கையில் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை வீட்டு வசதி அமைச்சருக்குப் போடலாம்.

திரு. நா. வீராசாமி: கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். இப்போது கூவம் ஆற்றங்கரை ஓரத்தில் அவர்களுக்கு இடத்தை ஒதுக்கி அந்த ஊழியர்கள் வீடு கட்டிக் கொள்ள அரசாங்கம் வழி வகுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டப்படுமா என்ற மூலக் கேள்விக்கு இல்லையென்று பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் கூவம் ஆற்றங்கரையில் இப்போது வீடு கட்டும் திட்டம் ஒன்றும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். இப்போது எவ்வளவு கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு கடைநிலை ஊழியர்களுக்கு வீடு இல்லை? அதுபற்றி விவரம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? எப்போது அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நிறைவேறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடைநிலை ஊழியர்களுக்கு கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற பட்டியல் இருக்கிறது. ஆனால் அந்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் அவர்களுக்கு வேறு இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கலாம் என்பது பற்றி ஜாயின்ட் செர்விஸ் கவுன்சிலில் பேசப்பட்டு முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. இ. எஸ். தியாகராாசன் : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் டெலிவிஷன் அமைப்பது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டெலிவிஷன் அமைக்க இடம் ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் மேலும், மேலும் கட்டடங்களைக் கட்டுவதால் அதன் அழகு குறைந்து வருகிறது. மவுண்ட் ரோடு அருகில் ஓப்பன் ஸ்பேஸ் தேவைப்படுகிறது என்ற காரணத்தால் இனிமேல் கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் எந்தக் கட்டடமும் கட்டப்படாது என்ற முடிவுக்கு அரசு வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு இறுதியான முடிவை இப்போது செய்வது சாத்தியமல்ல.

திரு. கே. ஏ. வகாப் : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் அழகு கெடாத முறையில் அழகான வீடுகளைக் கட்டி வெளியூரிலிருந்து வந்து தங்குகின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வெளியூர் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது உள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வீடு கட்டும் திட்டம்பற்றிப் பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

திரு. என். கணபதி : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் உள்ள குவார்ட்டர்ஸ் பழைய பெயர்களிலேயே இன்னும் வழங்கி வருகிறது. குறிப்பாக ஸ்டேபிள் சூப்பரின்டென்டென்ட் குவார்ட்டர்ஸ் என்ற கீழ்த்தரமான பெயர்களில் இருக்கிறது. அதை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போதே நம்முடைய தமிழ்ப் பெயர்களைப் பல இடங்களில் வைத்திருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் ஒரு சினிமா தியேட்டர் கட்டினால் நல்ல வருமானம் கிடைக்கும். இது பற்றி அரசு யோசிக்குமா?

1971 ஜூலை 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே சில்ட்ரன் தியேட்டர் இருந்து வருகிறது. அதைப் புதுப்பிக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. 15, 20 லட்சம் ரூபாய் வரை செலவுசெய்து புதுப்பித்து ஏர் கண்டிஷன் செய்யும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, will the Government contemplate to construct Ministers' residences in the Government Estate?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு எண்ணம் இல்லை. அமைச்சர்களுக்கு இப்போது இருக்கும் வீடுகளே போதுமானவை.

திரு. கே. என். குமாரசாமி: கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் இருக்கும் எம்.எல்.ஏ. ஹாஸ்டல் சில இடங்களில் சுவர்கள் வெடிப்பு ஏற்பட்டு அபாய நிலையில் இருக்கிறது. விழுகின்ற நிலையில் இருக்கும் அதைப்பாதுகாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: விழுகின்ற நிலையில் இருப்பதாக எந்தவிதமான புகாரும் கிடையாது. இதுபோன்ற பீதியான கேள்விகளைக் கேட்பதன்மூலம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பீதியைக் கிளப்ப வேண்டாம். மூலக் கேள்வி கடைநிலை ஊழியர்களுக்கு கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றியாகும்.

திரு. நா. வீராசாமி: கவர்ன்மென்ட் எஸ்டேட்டுக்குள் ஹாஸ்டல் இருக்கிறது. சபாநாயகர் இல்லம் (கூவம் ஹவுஸ்) இருக்கிறது. ஹாஸ்டலுக்குத் தொடர்புடைய துணைச் சபாநாயகருக்கு அங்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைச் சபாநாயகர்மீது காட்டுகின்ற அனுதாபத்திற்காகப் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவிப் பொறியாளர் முதலானோருக்குக் குடியிருப்புகள்

* 484 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறையில் பணியாற்றும் உதவிப் பொறியாளர், மேற்பார்வையாளர், நீர்ப்பாசன குமாஸ்தா, நீர்க் காவலர்கள் ஆகியோர்களுக்கு அரசே குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ): பொதுப்பணித்துறையின் மேற்பார்வையாளர்களுக்கும், உதவிப் பொறியாளர்களுக்கும், குடியிருப்பு வழங்குவதில் ஒரு திட்டவட்டமான ஏற்பாடு இதுவரையில் பின்பற்றியதில்லை. அவசியமான